முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS.2/2024

Witness PW 1

பெயர்: கோவிந்தம்மாள்

க/பெ.: ஆறுமுகம்

இன்று (15/07/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாக சொல்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொன்ன விவரங்களைத் தான் எனது வழக்கறிஞர் தயார் செய்து அதில் நான் கைரேகை இட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1982ம் ஆண்டு நானும் எனது தகப்பனார் பூங்காவனக் கவுண்டரும் சேர்ந்து தாவா சொத்து விலைக்கு வாங்கியபோது நான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். அப்போது பத்திரப் பதிவு அலுவலகத்தில் ஆவணத்தில் கையெழுத்திட்டோமா என்றால் இட்டோம். பத்திரபதிவு அலுவலகத்திற்கு எதற்காக போக வேண்டும் என்றால் பத்திரம் பதிவு செய்வதற்காக போக வேண்டும். 1985ம் ஆண்டு எனது தந்தை பூங்காவனம் என் பெயருக்கு 96-1/2 செண்ட் தானம் எழுதிக்கொடுத்தபோது நான் பத்திர அலுவலத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். பிரதிவாதி பிரகாஷ் என்பவருடன் பத்திர பதிவு அலுவலகத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். என்னுடன் யார் யார் பத்திர பதிவு அலுவலகத்திற்கு வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை. யாரையும் அழைத்து வர வேண்டாம் என்று பிரகாஷ் சொல்லிவிட்டார். பிரகாஷ் தரப்பில் மட்டும் தான் ஆட்கள் வந்தார் என்றால் சரிதான். பத்திர பதிவு அலுவலகத்தில் சார்பதிவாளர் என்ன ஆவணம் ஏற்படுகிறது என்று என்னிடம் கேட்டார்களா என்றால் என்னை கேட்கவில்லை. எதற்காக ஆவணத்தில் கைரேகை வைக்க வேண்டுமென்று நான் கேட்டேனா என்றால் பிரகாஷ் யாரையும் கேட்கத்தேவையில்லை என்று சொல்லிவிட்டார். பத்திர பதிவு அலுவலகத்தில் எந்த ஆவணங்கள் பதிவு செய்தாலும் அதற்கு சாட்சிகள் கையெழுத்திடுவார்கள் என்றால் சரிதான். என்னை சாட்சி எதுவும கூட்டி வரக் கூடாது என்ற பிரகாஷ் சொல்லிவிட்டார். என்னுடன் எந்த சாட்சியும் வரவில்லை என்றால் யாரும் வரவில்லை. சாட்சி வீரப்பன் த/பெ.ஆறுமுகம் என்பவர் கிரையப் பத்திரத்தில கையெழுத்திட்டுள்ளார் அந்த வீரப்பன் யார் என்றால் என் மகன். எனது வழக்குரையிலோ முதன்மை சாட்சிய பிரமாணப் பத்திரிக்கையிலோ எனது மகன் வீரப்பன் ஒரு சாட்சியாக இருந்து கையெழுத்திட்டுள்ளார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடம் ரூ.4,00,000/- ஒரு பைசா வட்டிக்கு வாங்கியதாக சொல்லும் நான் ஏதாவது வட்டி செலுத்தியதாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கறிஞர் வேண்டுகோ ளுக்கிணங்கள் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.
Sd/A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram